1978 மார்ச் 2]

திரு. துரை முருகன் : கேள்வி அவிநாசி சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவிநாசி சம்பந்தப்பட்ட கேள்வியைத்தான் நான் கேட்கிறேன். அவிநாசி தாலூகாவில் இரண்டாண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டாண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கப்பட வேண்டுமென்று கோரி வந்த மகஜர்கள் எத்தனை ? அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? கொடுக்கப்படும் மாடுகள் ஒரு ஜாதி மாடா அல்லது எல்லா மாடுகளும் வாங்கப் பணம் கொடுக்கப்படுகிறதா ? எந்த மாட்டை வாங்குவது ? காங்கேயம் மாட்டை வாங்குவதா அல்லது வேறு மாட்டை வாங்குவதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவிநாசிக்குக் கொடுக்கவில்லை என்று சொன்ன பிறகு இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

சிதம்பரம்—பிச்சாவரம் சாலை.

* 355வினா—திரு. துரை கலியமூர்த்தி திரு. எம். செல்வராஜ். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம்—பிச்சாவரம் வழித்தடம் மிகவும் சீர் கெட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை சீர் செய்யும் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 2.40 லட்சம் மதிப்பில் இச்சாலையை மேம்பாடு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : சிதம்பரம் தாலூகாவில் பிச்சாவரம் பகுதி பேரறிஞர் அண்ணா அவர்களை மிகவும் கவர்ந்த பகுதி என்பதை உணர்ந்திருக்கிறோம். பிச்சாவரத்தை சுற்றுலா ஸ்தலமாக ஆக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு பல மாதங்கள் ஆகின்றன. பிச்சாவரத்தின் முக்கியத்துவத்தைக் கருதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை விரைந்து செய்து முடிக்க முன் வருவார்களா ? எவ்வளவு விரைவில் செய் வார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் அப்பகுதி மிகவும் சீர்கெட்டு இருக் கிற காரணத்தால் தார் ரோடு போடுவதற்கும் ஏற்பாடு செய்யப் படுகிறது. விரைவில் அந்தப் பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலிருந்து பிச்சாவரம் செல்வதற்கு ஒரு குறுக்கு வழி இருக்கிறது. அந்த வழியில் சென்றால் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தூரம் குறைவாக இருக்கும். அந்த வழியை பிச்சா வரம் செல்வதற்குப் பயன்படுத்த—அதை சுற்றுலா துறையினு டைய பாதையாக ஏற்று உடனடியாக ஏற்படுத்த—அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

Tiruppur-Akkanampalayam bus route.

*356 Q.—Thiru K. KANDASWAMY : Will the Honourable the Minister for Transport be pleased to state:

(a) whether it is a fact that a permit was issued for plying town bus from Tiruppur Bus stand, Dharapuram road, Government Hospital Chettipalayam, Mudroad to Ayyampalayam, Kalinathampalayam, Akkanampalayam, etc., to the Government Transport Undertaking;

(b) whether the Government are aware that buses are not operated on the route; and

(c) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.